# 3

# ஆன்மாவிற்கு உணவாகும் சூபி இசை
# சூபி இசை மரபும் அதன் அழகியல் பரிமாணமும்

**எம்.எஸ்.எம். அனஸ்**

சூபிப் பிரிவினரின் பக்தி அல்லது ஆன்மீக இசையையே சூ∴பி இசை என்ற சொல் குறிக்கிறது. ஒலியும் இசையும் சூ∴பிகளின் ஆன்மீகப் பயிற்சிகளிலும் தியானங்களிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன சூ∴பிஸம் என்பது வெறுமனே கோட்பாடும் சித்தாந்தமும் அல்ல. அதன் நேரடி இலக்கும் உணர்வும் ஆன்மீகத்தில் உயர் ஐக்கிய நிலையை அடைவதும் அதற்கான பயிற்சியில் ஈடுபடுவதும் ஆகும்.

சூ∴பிஸம் என்பது வெறுமனே கோட்பாடும் சித்தாந்தமும் அல்ல அதன் நேரடி இலக்கும் உணர்வும் ஆன்மீகத்தில் உயர் ஐக்கிய நிலையை அடைவதும் அதற்கான பயிற்சியில் ஈடுபடுவதும் ஆகும்.

இறைவனை நெருங்குதலுக்கான தியானப் பயிற்சிக்கு உதவும் உபகரணமாக இசையைச் சூ∴பிகள் பயன்படுத்துகின்றனர். சட ரீதியான உடலைக் கடந்து ஆன்மீக உலகிற்குள் பிரவேசிப்பதற்கும், ஆன்மீக உணர்வுகளை விசாலிப்பதற்கும் சூ∴பி இசை பயன்படுவதாக சூ∴பிகள் நம்புகின்றனர்.

## அகநிலை அனுபவங்கள்

உண்மையை உணர்தலும் அகநிலை அனுபவங்களும் சூபித்துவத்தின் அடிப்படைகளாகும். இறைகாதலும் இறைபக்தியும் ஒன்றிணைந்த தியானப்பயிற்சி மற்றும் வாழ்க்கை நெறிகளூடாக பேருண்மையை அறிவதற்கும் நெருங்குவதற்கும் ஒரு சூபி முயல்கின்றார். இந்த ஆன்மீக வழி அரபு மொழியில் 'தரீக்கத்' எனப்படும். இறைவனை அடைவதற்கான ஆன்மீகப் பாதை என்பது இதன் பொருள்.

இறை நேசத்தையும் நெருக்கத்தையும் தன் உணர்வால் பெற்றுக் கொள்ளும் பெரிய ஆன்மீக முயற்சி இது. சூபிப் பாதையில் இறைகாதலும் இறைநெறியும் ஒன்றுகலந்துள்ளன. தெய்வீக ஒழுக்கம் ஒரு சூபியை நெறிப்படுத்தும் சக்தியாகும். அகத் தூண்டலின் ஒளியை அக உலகில் உணரும் ஒரு ஆனந்த நிலைக்காக ஒரு சூ∴பி காத்திருக்கின்றார்.

இதற்காக அவர் எம்மைப் போல் அறிவு ரீதியான நிரூபணங்களின் பின்னால் ஓடுவதில்லை. சாட்சியங்கள் தர்க்க நியாயங்கள் சூபியின்

கண்ணில் படுவதில்லை. சூபியின் இலக்கு காதல் உணர்வினாலும் ஒழுக்க நெறியினாலும் அக நிலை ஆன்மீக உணர்வை மேம்படுத்து வதுமாகும். சூ∴பி என்பவர் இறை காதலர். எல்லாக் காதலர்களையும் போலவே இறை காதலில் தனது அகவுணர்வை மிக உருக்கமாக அவர் வெளிப்படுத்துகிறார். அக்காதலுக்கு உண்மையாக இங்கிருக்க தனக்கு அவர் பயிற்சி தருகின்றார்.

சூ∴பியை மறைஞானி எனக் கூறலாம். குர் ஆன் கூறும் மறைவான உள் பொருளின் அடிப்படையில் சூ∴பி வாதம் தனது ஆன்மீக பயிற்சிகளையும் கொள்கைகளையும் வகுத்துள்ளது என்று சூ∴பி ஞானியர் நம்புகின்றார். மறைபொருள் உண்மைகளைத் தேடுவதில் அவர்கள் ஆவலுடன் செயற்படுகின்றனர். இறைவனை அடையும் பாதையில் மேலும் மேலும் தன்னை ஈடுபடுத்துவது அதற்காக முயற்சிப்பது சூ∴பிஸத்தின் அடிப்படையாகும். இதற்காக தியானங்களையும் உள் மனப் பார்வைகளையும் ஒரு சூ∴பி விருத்தி செய்கிறார். அந்தக் கல்வியையும், பயிற்சியையும் தமது குழுக்களுடன் அவர் பகிர்ந்து கொள்கிறார்.

எல்லா சூ∴பிப் பிரிவுகளும் இசைக்கு முக்கியத்துவம் தருவதில்லை. இசைக்குப் பதிலாக அவை ‘திக்ர்’ அதாவது கடவுளைத் தியானித்தலுக்கு முக்கியத்துவம் தருகின்றன. ‘மவ்லீத் அந்நபவீ’ அதாவது திருத்தூதர் நபியைப் புகழ்ந்து அவரது அருள் வேண்டிப் பாவிசைப்பது சில சூ∴பிப் பள்ளிகளின் மரபாகும். முஹமத் (ஸல்) மீது அன்பை வெளிப்படுத்தும் மவ்லீது பாஒதல்களும் இதில் அடங்கும்.

எல்லா சூ∴. பிப் பிரிவுகளும் இசைக்கு முக்கியத்துவம் தருவதில்லை இசைக்குப் பதிலாக அவை ‘திக்ர் அதாவது கடவுளைத் தியானித்தலுக்கு முக்கியத்துவம் தருகின்றன.

கி.பி 620-1100 காலப் பிரிவு சூ∴பித்துவத்தின் தொடக்க காலமாக கருதப்படுகின்றது. இக்காலத்தில் சூபிகள் ஷெய்குகள் என்று அழைக்கப்பட்டனர். குர் ஆன் வசனங்கள் பலவற்றைத் தனது சூ∴. பித்துவ சிந்தனைத் தூண்டலுக்கும் சமயரீதியிலான நியாயப் படுத்தலுக்கும் அவர்கள் பயன்படுத்துகின்றனர். வைதிக மரபாளர்களில் சில பிரிவினர் சூ∴பித்துவத்திற்கு எதிராகத் தமது கருத்துக்களை முன்வைக்கின்ற போதும் சூ∴பிஸத்தின் செல்வாக்கானது பரந்த புவியியல் பரப்பிற்குச் சொந்தமானது. சூ∴பித்துவமும் சூ∴பி சமூதாயங்களும் இஸ்லாம் தோன்றிய திலிருந்து மொறக்கொவிலும் மத்தியாசியாவிலும் தென் ஆசியா விலும் துருக்கி, ஈரான், சீரியா, வடஆபிரிக்கா, மேற்கு ஆபிரிக்கா, இந்திய உப கண்டத்தின் பல பாகங்களிலும் பரவிக் காணப்படுகிறது.

## ஆன்மாவுக்கான இசை

உலகியல் எண்ணங்களைக் கடந்து ஆன்மாவின் உணர்வை சூ∴பி இசை சூ∴பிகளிடம் மேலெழச் செய்கிறது. ஆழமான ஆன்மீகத்

தொடர்புகளை இது ஏற்படுத்துகிறது. ஒரு சூ.ஃ.பி முஸ்லிமைப் பொறுத்தவரை இறைவனுடனான நெருக்கத்திற்கு இது வாய்ப் பளிப்பதாக அவர் உறுதியாக நம்புகிறார். இறைவனின் அருளும் ஒளியும் பரவும் இவ் ஆன்மீக நிலைக்கு வழியமைக்கும் இவ்விசையை 'ஆன்மா இசை' (Soul Music) என்று சூபிகள் அழைக்கின்றனர்.

சூ.ஃ.பி இசையை ஆன்மாவின் உணர்வு (கீஸா – கி - ரூஹ்) என்று சூ.ஃ.பிகள் கூறுகின்றனர். சூ.ஃ.பி இசை ஆன்மீகத்துக்கான தூண்டுதல் என்று சூ.ஃ.பிப் பெரியார் முர்ஷித் இனாயத்கான் கூறுகின்றார். இசையானது உடலிலும் உள்ளத்திலும் அதிர்வுகளை தோற்றுவிக்கின்றன. இதன் மூலம் சூ.ஃ.பி ஒருவர் ஆன்மீக உச்சத்தை அடைகிறார் என்று இனாயத்கான் கூறுகிறார். இறைவனின் படைப்பில் ஓசையும் ஆன்மீக அபிவிருத்தியில் இசையும் என்பன அவரது பிரதான ஆய்வுப் பொருள்களாக இருந்துள்ளன.

ஹஸரத் இனாயத்கான் (*1882 – 1927*) இந்தியாவின் சூபி அறிஞர். 'மேற்குலகின் சூபித்துவப் பாதை' என்ற அமைப்பை உருவாக்கியவர். அவர் ஒரு இசைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது பாட்டனார் புகழ் பெற்ற இசைக்கலைஞர். இனாயத்கான் ஒரு வீணை வாத்தியக் கலைஞர். சிஷ்தி, காதிரி, நக்ஸ்பந்தி சூபிப் பாதைகளின் சூபித்துவ மரபுகளில் பயிற்சி பெற்ற இனாயத்கான் இஸ்லாமிய சூபித்துவக் கருத்துக்களோடு சூபிப் பொதுமைவாதத்தையும் சமயங்களிற்கிடையிலான பொதுப் பெறுமானங்களைப் பற்றிய கருத்துக்களையும் வளர்ப்பதில் ஈடுபட்டார். ஆன்மீகப் பண்புகளை மேம்படுத்துவதில் இசையைப் பயன்படுத்தி புதிய கலந்துரையாடல் களுக்கு அவர் வழிவகுத்தார்.

எனது மெய்யியலில் ஏதாவது இருக்குமாயின் அது ஒத்திசைவின் விதியாகும் ஒவ்வொருவரும் தம்மை ஒத்திசைவாக்கம் செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வார்த்தையிலும் இசைப் பெறுமானம் இருப்பதாக நான் உணர்கிறேன்.

இயக்கம் வாழ்வின் முக்கிய அம்சம். இயக்கத்தின் விதி லயமாகும். வாழ்வின் எல்லா விடயங்களிலும் லயம் வெளிப்படுகின்றது. மாறு வேடமணிந்து எல்லாவற்றிலும் அது உள்ளடங்கி உள்ளது. குழந்தைகளின் பொம்மை விளையாட்டில், தொட்டிலின் ஆட்டத்தில், கிரிகட் ஆட்டத்தில், மல்யுத்தத்தில் எங்கும் இது உள்ளது என்பது இசை பற்றிய இனாயத்கானின் கோட்பாடுகளில் வெளிவரும் செய்திகளாகும்.

தொன்மை சூ.ஃ.பிகளைப் போல் மறை பொருள் உண்மைகளை ஒலியினாலும் இசையினாலும் இனாயத்துல்லாகான் வெளியிட முயன்றார். இசை நரம்புகளை மீட்டும் போது ஒவ்வொரு ஆன்மாவையும் ஒவ்வொரு இசைக் குறியாக உணர்ந்தேன். எல்லா உயிர்களும் இசையாகியதாக உணர்ந்தேன். எனது மெய்யியலில் ஏதாவது இருக்குமாயின் அது ஒத்திசைவின் விதியாகும். ஒவ்வொரு வரும் தம்மை ஒத்திசைவாக்கம் செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வார்த்தையிலும் இசைப் பெறுமானம் இருப்பதாக நான்

உணர்கிறேன். ஒவ்வொரு சிந்தனையிலும் ஒரு இனிய ராகம் உள்ளது. எல்லா உணர்ச்சிகளிலும் இருப்பது ஒத்திசைவுதான். எனது இசையைக் கேட்பவர்களுக்கு எளிய முறையில் இதைத்தான் விளக்குகின்றேன். ‘நான் வீணையை இசைக்கின்றேன். எனது இருதயம் வீணையாக மாறும் வரை’ என்று இனாயத்துல்லாகான் கூறுகிறார். (The spiritual message of Hajarat Inayat Khan – Mysticism of music https// wahiduddin.net)

ஒவ்வொரு சிந்தனையிலும் ஒரு இனிய ராகம் உள்ளது. எல்லா உணர்ச்சிகளிலும் இருப்பது ஒத்திசைவுதான். எனது இசையைக் கேட்பவர்களுக்கு எளிய முறையில் இதைத்தான் விளக்குகின்றேன்.

சூ.ஃ.பித்துவ நோக்கில் இசைக்குரிய அம்சங்கள் பற்றி ஹஸாத் இனாயத்கான் குறிப்பிடுவதைச் சுருக்கமாக இவ்வாறு கூறலாம்.

தரப் : இசை உடல் இயக்கங்களைத் தூண்டுகிறது.
குல் : இசை உணர்ச்சிகளை உருவாக்குகிறது
நிதா : இசை அக உணர்வை எழுப்புகிறது
சவ்த் : இசை அருவமானது.

## ஸமா இசை

ஸமா இசை ஊடாகத்தான் நாம் சூபி இசை வகையை அல்லது இசையும் நடனமும் கலந்த பக்தி - தியானப் பாதையை அறிகின்றோம். இனிய இசை நடனத்தின் வழியாக நிகழும் தியானமுறை என்றும் பரிபூரணத்தை அடையும் வழிமுறை என்றும் இது வர்ணிக்கப்படுகிறது. ‘ஸமாவின் குறிக்கோள் வாஜித்தை அடைவதாகும். ‘வாஜித்’ என்பது ஒரு மெய்மறந்த பரவச நிலையாகும்’. (ஜலாலுத்தீன் ரூமி, தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் 2015)

ஸமா இசை அடிப்படையில் ஆன்மீக் தூண்டலுக்கு வழி ஏற்படுத்துவதை நோக்காக கொண்டிருந்த போதும் ஏனைய இசைப் பரிணாமங்களையும் ஸமா இசை வெளிப்படுத்தலாம். ஒருவருக்கு அது தூய ஆன்மீக உணர்வையும் மற்றொருவருக்கு தூய இசை இன்பத்தையும் அது வழங்குதல் கூடும்.

சூபி இசை என்று பொதுவாகப் பேசப்படும் இசை மரபு ‘ஸமா’ இசையில் இருந்து ஆரம்பமாகிறது. ஆன்மீகப் பயிற்சிக்கும் ஆன்மீக உணர்வுத் தூண்டலிற்கும் 11ம் நூற்றாண்டுடில் இருந்து சூபிப் பிரிவினர் மத்தியில் இன்றும் கொண்டாடப்படும் இசை மரபே ஸமா ஆகும்.

சூ.ஃ.பி ஸமா இசை ஆன்மீகத்துடன் மட்டுமே தொடர்புடையது என்று ரெகியூலா பர்ச்சட்டன் போன்றோர் வாதிடுகின்றனர். மிக்கோ வித்ததாமக்கி இதை மறுத்து வாதிடுகிறார். ஸமா இசைக்கென ஒரு இசைப் பரிமாணம் உண்டு. அங்கு பல்வேறு இசைப் பண்புகளும் பண்முறைகளும் ஒன்றுகலக்கின்றன. ஆன்மீக ஒன்றுகூடல்களில்

இசைக்கப்படும் ஸமாவிற்கும் பொது மக்கள் இசை அரங்குகளில் இசைக்கப்படும் ஸமா இசைக்கும் வேறுபாடுகள் இல்லை என்பது அவரது வாதம். பெரும்பாலும் அது அவ்வாறுதான் நிகழ்ந்துள்ளது. மத்திய கிழக்கு, மத்திய ஆசிய, இந்திய உபகண்ட மக்களை மட்டுமன்றி இன்று சர்வதேச அளவில் இது இசை ஆர்வலர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்திய சினிமா இசையிலும் இதன் செல்வாக்கு ஆழமானது. டெல்லிக்கும், இஸ்தன்பூலுக்கும், கென்யாவிற்கும், தூனீஷியாவிற்கும் இன்னும் பல முஸ்லீம் நாடுகளுக்கும் நகரங்களுக்கும் இவ்விசையை நேரடியாகப் பார்த்து ரசிக்க மக்கள் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஸமா இசைக்கென ஒரு இசைப் பரிமாணம் உண்டு. அங்கு பல்வேறு இசைப் பண்புகளும் பண்முறை களும் ஒன்று கலக்கின்றன.

சமாவின் மூலத்தோற்றம் 'திக்ர்' இறை நாமத்தை நினைவுபடுத்தி ஓதப்படும் தியான நிகழ்வுடன் தொடர்புடையது. தியானத்தில் ஈடுபடும்படியும் இறைவனைப் புகழும்படியும் சூபித்துவம் அடியார்களைப் பணிக்கின்றது. தியான நிகழ்வுகளில் அடிப்படைக் கூறுகளாகக் குர்ஆனின் வாக்கியங்களும் ஓதப்படுகின்றன. இவ்வகைப் பயிற்சிகள் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. அவற்றின் உச்ச நிலையாக 'மெய்மறந்த மகிழ்ச்சி' நிலையை ஒருவரில் அவை கொண்டு வருகின்றன. தியானம் மனித மனத்தை ஒருமைப்படச் செய்கிறது. உளநிலை மாற்றங்களும் அங்க அசைவுகளில் மாற்றங்களும் இங்கு நிகழும். ஆனால், இசையுடன் தியானமும் வசன உச்சாடனமும் ஒன்றுசேரும் போது ஒருவரின் உடலிலும் உள்ளத்திலும் ஏற்படுத்தும் தாக்கங்கள் அதிகமானது. முக்கியமாகத் தியானங்களில் பிரயோகிக்கப்படும் வசன உச்சாடனங்களுக்குப் பொதுவாகவே இந்த ஆற்றல் உண்டு என்று ஸமா நிகழ்வின் உளவியல் தாக்கங்களை ஆய்வு செய்பவர்கள் கூறுகின்றனர்.

இசையுடன் தியானமும் வசன உச்சாடனமும் ஒன்றுசேரும் போது ஒருவரின் உடலிலும் உள்ளத்திலும் ஏற்படுத்தும் தாக்கங்கள் அதிகமானது.

ஸமா என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. 'கேட்டல்' என்பது அதில் ஒன்று. சூபிகளின்படி பார்த்தால் இது 'ஆன்மீகக் கேட்டல்' (Spiritual listening) ஆகும். அதாவது உள நிலையில் ஒரு உயர்வையும் 'மெய்மறந்த மகிழ்ச்சி'யையும் பெறுவதற்காக இசை இங்கு பயன்படுத்தப்படுகிறது. ஆன்மாவை வளப்படுத்துதல் என்று சூபிகள் இதனைக் கூறுகின்றனர். இங்கு இசையும் பாடல்களும் ஆன்மீகமயப்படுத்தப்படுகின்றன.

தொடக்க கால சூ.ஃ.பி நெறியை விளக்குவதில் மிகவும் ஆதார பூர்வமான படைப்பாக கருதப்படும் சூபிப் பாதையின் சிறப்பினைக் கூறும் நூலில் (கிதாப் அல்லுமா பில் தஸ்வுப்) அதன் ஆசிரியர் முஹம்மத பின்யஹ்யா அல்-ஸராஜ் அல்தூஸி (இற. கி.பி 988) குர் ஆன் ஹதீஸ் மூலாதாரங்களில் இருந்து ஸமா இசை தியானத்தின் போது தியான உச்சாடனங்கள் நடைபெறுவது பற்றியும் அங்கு நிகழும் ஓதல்களின் முக்கியத்துவம் பற்றியும் கூறுகின்றார்.

இஸ்லாம் மார்க்கத்தில் இசை ஏற்கப்பட்டதா இல்லையா என கருத்துப் பேதங்கள் உள்ளன. வைதீகக் கொள்கைகளை அனுசரிப் போர் இஸ்லாமில் இசை தடுக்கப்பட்டது (ஹராம்) என்ற கருத்தை ஆதரிக்கின்றனர். மாறாக இசை ஆகுமானது என்று கூறி அதற்காக வாதிடுவோரும் உள்ளனர். எனினும் சூ∴பிகள் இந்த விவாதங்களில் இல்லை. அனால் ஆன்மீக உணர்வை வெளிப்படுத்துவதிலும் பௌதீக நிலைக்கு அப்பால் ஆன்மீக அக வெளிப்பாட்டை அறிவதிலும் இசையினதும் கவிதைகளினதும் பங்கினை அவர்கள் ஆழமாக உணர்ந்துள்ளனர்.

இஸ்லாம் மார்க்கத்தில் இசை ஏற்கப்பட்டதா இல்லையா என கருத்துப் பேதங்கள் உள்ளன. வைதீகக் கொள்கைகளை அனுசரிப்போர் இஸ்லாமில் இசை தடுக்கப்பட்டது (ஹராம்) என்ற கருத்தை ஆதரிக்கின்றனர்.

சூ∴பிப் பாடல்கள் திரும்பத் திரும்ப இறைவனின் புகழையும் திருத்தூதரின் புகழையும் எடுத்துரைக்கின்றன. அனைத்திற்கும் மேலாக ஆன்மீக உணர்வின் அருவ நிலையின் உச்சத்தைப் பெறும் தேடலில் இசையும் பாடலும் சூ∴பி மரபில் பெற்றுள்ள இடம் முக்கியமானதாகும்.

ஜலாலுத்தீன் ரூமியின் மஸ்னவியும் திவானி 'ஷம்ஷும்' கிழக்கிலும் மேற்கிலும் புகழ் பெற்ற சூ∴பி இலக்கியங்களாகும்.கற்பனைகளும் குறியீடுகளும் பரவிய இறை காதலைப் பேசும் ஆன்மீக இலக்கியங்கள் அவை. அன்புக்குரியவரை பிரிகின்ற அல்லது பிரிந்த துயரை சூ∴பிக் கவிஞர்கள் மறைஞானப் பின்னணியில் பாடி இருப்பதை இவற்றில் காணமுடியும்.

முற்காலத்தில் போலவே தற்காலத்திலும் இவ்வாறான பாடல்களும் கவிதைகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன. வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, இலங்கை வரை இம் முயற்சிகளில் சூ∴பியாக்கள் ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது.

இசையும் இசையுடன் கலந்த நடனமும் சில சூ∴பிப் பிரிவு களில் பின்பற்றப்படுகின்றன. சூ∴பியாக்களின் இவ்விசை மரபும் நடனங்களும் உலக கலைகளிற்கான பெரிய பங்களிப்பாக இன்று போற்றப்படுகின்றது.

இசையும் இசையுடன் கலந்த நடனமும் சில சூ∴பிப் பிரிவுகளில் பின்பற்றப் படுகின்றன. சூ∴. பியாக் களின் இவ்விசை மரபும் நடனங்களும் உலக கலைகளிற்கான பெரிய பங்களிப்பாக இன்று போற்றப் படுகின்றது.

தமது தியான வழிபாட்டுச் சபைகளில் இசைக்கருவிகளுடன் சூ∴பிகள் தமக்கென சிறப்பாக அமைந்த இசையை பயன்படுத்து கின்றனர். அல்லாஹ் மற்றும் முஹம்மது நபிகள் பேரிலான பக்திப் பாடல்கள் அங்கு இசைக்கப்படுகின்றன.

தொடக்க காலத்தில் சூ∴பியச் சிந்தனைகளும் வழிமுறைகளும் வாய்மொழி மரபாகவே பெரிதும் காணப்பட்டுள்ளன. அவ்வாறு ஆரம்பித்து சுமார் 800 ஆண்டுகளின் பின்னரே அதன் போதனை களும் கோட்பாடுகளும் எழுத்துருவம் பெற்றன. அடுத்த நான்கு நூற்றாண்டுகளில் சூ∴பிகளுக்கான கையேடுகள், மறைஞானக் கதைகள், வாழ்கை வரலாற்றுச் செய்திகள், இறையியல் சிந்தனைகள், சூ∴பித்துவப் பாடல்கள் என்பன எழுத்து வடிவம் பெறலாயின.

சூ.்.பிகள் ஒன்று கூடுவதற்கும் தியான வழிபாடுகளில் ஈடுபடுவதற்குமான நிலையங்கள் உருவாக்கப் பட்டன.

கதைகளும் வாழ்கை வரலாற்றுக் கதைகளும் சூ.்.பி இலக்கியங் களாகப் போற்றப்பட்டன. இவற்றுள் அதிகமானவை மறைஞானத்தை விளக்கும் போதனைக் கதைகளாகும். அத்தாரின் 'பறவைகளின் மாநாடு', சஆதியின் 'ரோஜாத் தோட்டம்' எனப் பல சூ.்.பி இலக்கியங்கள் தோன்றின. மறைஞான அறிவைப் பரப்புவதற்காக சூ.்.பிகள் கவிதைகளையும் இசைப்பாடல்களையும் பயன்படுத்தினர். இப்ன் அல் - வலீத், சா அதி, ஹாபிஸ், ஜாமி, ரூமி போன்ற சூ.்.பி மகான்களின் இலக்கியப் படைப்புக்கள் உலக அளவில் புகழ் பெற்றவை.

தமது தியான வழிபாட்டு மண்டபங்களில் சூ.்.பிகள் தியான வழிபாட்டுடன் இசைக்கும் இடமளித்தனர். ஆன்மீக உணர்வினை மேலோங்கச் செய்வதற்கு இசையை ஒரு கருவியாக சூ.்.பிகள் பயன்படுத்துகின்றனர். உயர் உண்மையை அறியும் ஆன்மீகத் தேடலின் இலக்கை அடைவதற்கு ஒவ்வொரு சூ.்.பியும் முயல்கிறார். இறை ஐக்கியத்திற்கான முயற்சி என்று சூ.்.பிகள் இதனைக் கருதுகின்றனர்.

13ம், 16ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பிரிவில் இஸ்லாமிய உலகு முழுக்க சூ.்.பித்துவச் சிந்தனைக் காலாசாரமும் ஆன்மீக வழிபாட்டு முறைகளும் வேகமாகப் பரவின. சூ.்.பிகள் ஒன்று கூடுவதற்கும் தியான வழிபாடுகளில் ஈடுபடுவதற்குமான நிலையங்கள் உருவாக்கப்பட்டன. இந் நிலையங்கள் 'கான்கா' என்று அழைக்கப்பட்டன. பெரும்பாலும் தர்ஹாக்கள், இறை நேசர் களின் அடக்கஸ்தலக் கட்டிடங்கள், பள்ளிவாசல்கள், மத்ரஸாக் களுக்கு அருகாமையில் இவை அமைக்கப்பட்டன. அவற்றுள் சில இப்போதும் இயங்கி வருகின்றன.

துருக்கி இஸ்தன்பூலில் உள்ள புகழ் பெற்ற சுலைமானியாப் பள்ளிவாசல் சூ.்.பிகளுக் கான தங்கு மிடத்தையும் நூல் நிலைய வசதிகளையும் கொண்ட பெரிய வளாகமாகும்.

வட ஆபிரிக்காவில் "கான்கா" ஸாவியா என்று அழைக்கப்பட்டது. துருக்கியிலும் உதுமானிய சாம்ராஜ்யங்களின் கீழ் இருந்த அல்பேனியா, பொஸ்னியா போன்ற நாடுகளிலும் கான்காவைத் தக்கியா என்று அழைத்தனர். இலங்கையில் கொழும்பிலும் தென் மாகாணத்திலும் பல ஸாவியாக்களும் தக்கியாக்களும் தரிக்காக் களின் வழிபாட்டு நிலையமாக இயங்கி வந்துள்ளன. தொழுகை, தியானம், சூ.்.பிஸ வழிமுறைகள் என்பவற்றைச் செயற்படுத்தக் கூடிய சிறப்பு கட்டட அமைப்பை இவை கொண்டிருந்தன. அரபு உலகில் ஸாவியா என்பது சூ.்.பிகளின் தங்குமிடம் என்று பொருள் கொள்ளப்பட்டது.

துருக்கி இஸ்தன்பூலில் உள்ள புகழ் பெற்ற சுலைமானியாப் பள்ளிவாசல் சூ.்.பிகளுக்கான தங்குமிடத்தையும் நூல் நிலைய வசதிகளையும் கொண்ட பெரிய வளாகமாகும். இவ்வாறு 17ம், 18ம் நூற்றாண்டுகளில் பள்ளிவாசல்களோடும் தர்ஹாக்களோடும்

சூ∴பி நிறுவனங்களும் இணைந்தே இயங்கி வந்துள்ளன. இக்காலப் பகுதியிலே (சூபி) தரிக்காப் பிரிவுகள் இலங்கையிலும் செல்வாக்குப் பெறுவதைக் காணமுடிகிறது.

கான்கா போன்ற சூ∴பி தியான நிலையங்கள் சிலவற்றில் சூ∴பி தியானங்களுடன் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. சூ∴பிகளின் ஸமா நடனங்களும் இதனுடன் இணைவதுண்டு. மிகவும் குறைவான சூ∴பிப் பள்ளிகளே நடனத்தையும் தமது கூட்டுப் பிரார்த்தனைகளில் ஒரு அங்கமாக இணைத்துக் கொண்டன.

மேற்குலகில் இந்நடனம் 'தர்வேஷ் சுழற்சி நடனம்' என்று அழைக்கப்படுகிறது. கட்டுப்பாட்டோடும் ஒழுங்குடனும் நடைபெறும் இந்த நடனத்தினை சூ∴பி அண்ணாவி ஒருவர் மேற்பார்வை செய்வார்.

சூபி ஒருவர் மேற்கொள்ள வேண்டிய பல பயிற்சிகளும் செயல் முறைகளும் சூ∴பி நடனத்தில் உள்ளன. தியானம், அதற்கான வழிமுறைகள், உடல் இச்சைக் கட்டுப்பாடுகள், குரல், இசை, உடல் சார் இயக்கங்கள் அசைவுகள் எனப் பல விதங்களில் சூ∴பி ஒருவர் தொடர் பயிற்சிகளில் தன்னை ஈடுபடுத்துகிறார்.

## உள்ளமும் இசையும்

மத்திய கால மெய்யியலாளரான இமாம் அல்-கஸ்ஸாலி தமது 'சமய மறுமலர்ச்சிக்கான விஞ்ஞானம்' (இஹ்யாவு உலூமுத்தீன்) என்ற நூலில் 'ஸமா' என்ற அத்தியாயத்தில் இசை கவிதை என்பவற்றின் அடிப்படைப் பண்புகளை விளக்கி உள்ளார். அவற்றின் முக்கியத்துவத்தையும் புலன் உணர்வுக்கும் மனித மனத்திற்கும் அவை தரக்கூடிய பயன்களையும் கஸ்ஸாலி விபரித்துள்ளார். இசையின் மறைஞான தாற்பரியங்களையும் அதில் அவர் பேசி உள்ளார். வீண் கேளிக்கைகளுக்காக ஸமாவைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்பட்டதல்ல என்று கஸ்ஸாலி எச்சரிக்கின்றார். ஓசையின் அழகை கேட்டு மகிழ்தல் மற்றும் ஆன்மீக உணர்வை மேம்படுத்துதல் என்பவற்றிற்குத்தான் ஸமா இசையில் அங்கீகாரம் உண்டு என்றும் கஸ்ஸாலி வலியுறுத்துகின்றார்.

> ஓசையின் அழகை கேட்டு மகிழ்தல் மற்றும் ஆன்மீக உணர்வை மேம்படுத்துதல் என்பவற்றிற் குத்தான் ஸமா இசையில் அங்கீகாரம் உண்டு என்றும் கஸ்ஸாலி வலியுறுத்து கின்றார்.

இந்த விதிகளுக்கு உட்பட்ட வகையில் ஆன்மீகத்திற்கும் உள நிறைவிற்கும் அழகியல் மீட்டலுக்கும் இசை எவ்வளவு முக்கியமானது என்பதை இமாம் கஸ்ஸாலியின் ஸமா அத்தியாயம் விரிவாகப் பேசுகிறது.

> மனிதனுடைய உள்ளமும் அதன் அடித்தளத்தில் புதைந்து கிடக்கும் எண்ணற்ற எண்ணங்களும், வைரச்சுரங்கத்திற்கும், அதில் பதிந்து கிடக்கும் வைரத்திற்கும் நிகராகும். இரும்பிலும்,

> கற்பாறையிலும், நெருப்பு ஒழிந்து கிடப்பதைப் போலவும், புழுதி படிந்த நிலப்பரப்பிற்கடியில் நீர் தேங்கி நிற்பதைப் போலவும், மனிதனின் உள்ளத்திலும் வைரத்திற்கொப்பான உயர் கருத்துக்கள் உறங்கிக் கிடக்கின்றன. வைரச்சுரங்களில் இருந்து வைரத்தை இரும்புக் கருவிகளைக் கொண்டு தோண்டி எடுக்கின்றோம். ஆனால் உள்ளத்தில் உறங்கும் விதவிதமான உணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப வேண்டுமாயின் அது இசையைக் கேட்டு மகிழ்வதாலும் பாட்டை ரசிப்பதாலும்தான் முடியும். மனமெனும் சுரங்கத்திற்கு செவிதான் இரகசிய வழி. ஆகவே முறைப்படி மீட்டப்பட்ட இனிய நாதம் தன்மட்டில் பற்பல உணர்ச்சிகளை ஏந்தி மிதந்து வரும் மனிதனுடைய உள்ளத்தைத் தாக்கி அதை நெகிழ வைத்ததும் அவனுடைய மனதில் அடங்கிக் கிடக்கும் பற்பல உணர்ச்சிகளும் வீரிட்டெழுகின்றன. இனிய கீதத்தை கேட்பது மனதிற்கு இதமளிக்கின்றது. நல்லிசையின் ஜீவனானது மனிதனின் மனதைத் தாக்கியதும் அச்சமயம் அவனுடைய உள்ளத்தில் எந்த உணர்ச்சி அதிகமாக பரவி யிருந்ததோ அதைத்தான் அது முதலில் மிகைக்கச் செய்கிறது.

*இறைவன் மீது தனது அன்பை அர்ப்பணிக்க விரும்புபவர் களுக்கும் அதனால் நன்மையை நாடுபவர் களுக்கும் ஸமா சிறந்த பயன்களை வழங்கும் என்பது இமாம் கஸ்ஸாலியின் கருத்து*

ஆன்மீக உணர்வை மேம்படுத்துவதிலும் அதை வலுப்படுத்து வதிலும் இசையினதும் பாடல்களினதும் முக்கியத்துவத்தை இமாம் கஸ்ஸாலி தமது ஸ்மாவில் இவ்வாறு விளக்கி உள்ளார்.

இறைவன் மீது தனது அன்பை அர்ப்பணிக்க விரும்புபவர் களுக்கும் அதனால் நன்மையை நாடுபவர்களுக்கும் ஸமா சிறந்த பயன்களை வழங்கும் என்பது இமாம் கஸ்ஸாலியின் கருத்து (பார்க்க: அஸ்ஸமாவு 1990). ஸமாவில் பங்கேற்போரின் நடத்தையும் அவர்களது ஈடுபாடும் முக்கியமானது என்றும் நேரம், இடம், தியானம் என்பவை பொருத்தமானதாக அமைவது ஸமாவுக்கு அவசியம் என்றும் கஸ்ஸாலி கூறுகிறார்.

ஸமா நூலில் இமாம் கஸ்ஸாலி இசையின் அழகியல் பண்பு களையும் இசையை இரசிப்பதன் முக்கியத்துவத்தையும் விளக்கி இருப்பது அவதானத்துக்குரியதாகும். மனத்திற்கு இதமான ஒலியிலும், இசையிலும் இனிமையும் இதமும் இருப்பதாக கஸ்ஸாலி கூறுகிறார். இதற்கு மார்க்கத்திலும் தடை இல்லை என்றும் கூறுகிறார்கள் (பார்க்க: அஸ்ஸமாவு 1990). இசை ஆகுமானது என்பதை வலியுறுத்தியும் இமாம் கஸ்ஸாலி சில வாதங்களை முன்வைத்துள்ளார். ஒவ்வொரு புலன்களுக்கும் உரித்தான இனிமையும் அவற்றிற்கான நயப்புக்களும் உள்ளன. ஒவ்வொரு புலனுக்கும் இனிமையும் இதமும் தரப்பட்டிருப்பது போல் செவிப்புலனுக்கு குயிலின் குரலினிமையும் குழலின் இன்னோசையும் இதத்தையும் இனிமையையும் வழங்குகிறது என்பது கஸ்ஸாலியின் கருத்து. சட்டரீதியாக கூறப்போனால் தன்னுடைய படைப்பிற்கு அவ்வுணர்ச்சிகளையும்

அவற்றுக்கான இனிமைகளையும் இறைவன்தான் கொடுத்துள்ளான் என்பதை குர்ஆனின் வசனங்களைப் பயன்படுத்தி கஸ்ஸாலி வாதிடுகிறார்.

இன்னொரு வகையில் கூறுவதாயின் சூ∴பிஸத்தின் மொத்த ஆன்மீக – தத்துவார்த்தக் கட்டமைப்பில் அழகியல் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. சூ∴பிப் பாதையில் உலக அனுபவமும் அதன் எண்ணங்களும் மறைஞான வடிவத்தினூடான அழகியல் உணர்வுகளாக இயங்குகின்றன. பிரபஞ்ச அழகின் மீதான நயப்பினால் தனது இதயத்தை நிறைவு செய்ய ஒரு சூ∴பி முயல்கிறார். அதன் மூலம் பிரபஞ்ச உறவுகளுடன் அவரது உள்ளமும் நெருக்கமடைகிறது. மேலும் உலகின் ஆழகினாலும் அன்பினாலும் பிரபஞ்சத்துடன் தொடர்பு கொள்ளும் திறந்த உள்ளத்தை சூ∴பி பெறுகிறார். அதன் மூலம் பிரபஞ்ச உறவுகளுடன் ஒரு ஆன்மீக – அழகியல் உறவை ஒரு சூ∴பி ஏற்படுத்திக் கொள்கிறார். பிரபஞ்ச இயக்கத்துடன் முழுமையான ஒத்திசைவையும் புரிதலையும் நோக்கி ‘தர்வேஷ் சுழல் நடனமும் ஸமா இசையும்’ சூ∴பி ஒருவரை அழைத்துச் செல்கிறது.

சூ∴பிஸத்தின் மொத்த ஆன்மீக – தத்துவார்த்தக் கட்டமைப்பில் அழகியல் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. சூ∴பிப் பாதையில் உலக அனுபவமும் அதன் எண்ணங்களும் மறைஞான வடிவத் தினூடான அழகியல் உணர்வுகளாக இயங்குகின்றன.

## மக்காம் இசை

மக்காம் என்பது சுருதி வகைகளைக் கொண்ட 13 வகை இராக சூத்திரத்தைக் குறிக்கிறது. இராக இயக்கத்தின் குறித்த வகையான ஒழுங்கமைப்பு இதுவாகும். அரபு இசை மரபின் இவ்வாறு பல டசின் மக்காம்கள் இருப்பதாக இசை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். புதியதாக மக்காம்கள் உருவாக்குவதற்கும் சந்தர்ப்பங்கள் உண்டு என்றும் கூறப்படுகின்றது.

மத்தியாசியாவில் தஜ்கிஸ், துருக்கர், உஸ்பெக்ஸ் மக்களின் இசை மக்காம் என்று கூறப்படுகிறது. மக்காம் என்றால் அரபு மொழியில் ‘நிலையம்’. சூ∴பிஸத்தில் இது ஒரு ஆதார வார்த்தை. ஒரு சூ∴பிக்கும் கடவுளுக்கும் உள்ள இடைவெளியின் கட்டங்களும் ‘மக்காம்’ என்றே கூறப்படுகிறது. அதனால் சூ∴பிஸத்தின் வேராக மக்காம் இசை அமைந்துள்ளது. மக்காம் இசையின் ஆழமான வேர்கள் நாட்டார் இசையுடன் தொடர்புபட்டுள்ளன. மத்தியாசியாவில் முஸ்லிம்களின் சமய இசையானது (1) சூ∴பிப் பிரிவினரின் இசை (2) பாசுரங்கள், பெருநாள் தினக் கீதங்கள், மல்லீது, நாத் என்ற நபிகளின் பிறந்தநாள் தின வாழ்த்துப் பாடல்கள் இசைக்கப்படும் மரபு உஸ்லெக்கிஸ்தானிலும் தஜ்கிஸ்தானிலும் கஸகஸ்தானிலும் இன்றும் காணப்படுகின்றன.

மத்தியாசியா சூ∴பிப் பிரிவுகளின் தோற்றத்திற்கும் சூ∴பிப் பிரிவிற்கான இசை வளர்ச்சிக்கும் பங்காற்றிய முக்கியமான

பிராந்தியமாகும். மத்திய ஆசியாவில் மக்காம் இசை மரபானது சமய கலாசார மற்றும் சமூக வாழ்விலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. 'மக்காம்' சூ.ஃ.பித்துவத்தை அறிய வைக்கும் சொல்லாகும். பல சூ.ஃ.பிப் பிரிவுகள் மத்தியாசியாவிலேயே தோன்றி உள்ளன. சூ.ஃ.பி இசை மரபிற்கு மக்காம் இசையும் நாட்டார் இசையும் பங்களிப்பு செய்துள்ளன.

## மெவ்லவி மரபு

மெவ்லவி (மவ்லவி) மரபு 'சுழல் நடன தர்வேஷ்கள்' என்றும் கூறப்படும். சூ.ஃ.பிப் பாதையில் தம்மை அர்ப்பணித்துச் செயல்படு வோரைச் சுட்டிக் காட்டும் சொல் தர்வேஷ் ஆகும். 'சுழல் நடனம்' திக்ர், தியான வழிபாட்டின் ஒரு பகுதியாகும்.

சூ.ஃ.பி இசை மற்றும் ஸமா நடன வளர்ச்சியில் துருக்கிய (உதுமானிய) சமூகம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அந்தோலியாவின் தலைநகர் கொன்யா இதன் பிறப்பிடமாகும். இங்குதான் மெவ்லாவி மரபு தோற்றம் பெறுகிறது.

இஸ்லாமிய இறையியல் வாதியும் சூ.ஃ.பி மறைஞானியும் சூபிக் கவிஞருமான ஜமாலுத்தீன் ரூமி 13ம் நூற்றாண்டில் மெவ்லவி மரபைத் தோற்றுவித்தார். மெவ்லவி (மவ்லவி) மரபு 'சுழல் நடன தர்வேஷ்கள்' என்றும் கூறப்படும். சூ.ஃ.பிப் பாதையில் தம்மை அர்ப்பணித்துச் செயல்படுவோரைச் சுட்டிக்காட்டும் சொல் தர்வேஷ் ஆகும். 'சுழல் நடனம்' திக்ர், தியான வழிபாட்டின் ஒரு பகுதியாகும்.

தர்வேஷ்கள் ஏழ்மையையும் துறவறத்தையும் விரும்பினர். சிலர் வீடு வீடாகச் சென்று யாசித்து வாழ்ந்தனர். ஸமா மரபின் பிரதான சொந்தக்காரர்கள் இவர்கள்தான். இவர்கள் ரூமியில் சூபித்து சிந்தனைகளுக்கும் அவரது தியான மற்றும் இசைப் பயிற்சிகளுக்கும் முக்கியத்துவம் தந்தனர்.

ரூமி (1207–1273) ஆங்கிலம் பேசும் உலகிலும் தமிழ் கூறும் உலகிலும் புகழ்பெற்ற பெயர். ரூமியின் முழுப் பெயர் ஜலாலுத்தீன் முஹமத் ரூமி. ரூமி என்பது இடத்தைக் குறிக்கும். அரபியில் இது நிஸ்வா என்று கூறப்படும். ரூமி என்பது ரோமன் துருக்கி - அந்தோலியாவைக் குறிக்கிறது. அந்தோலியா ஒரு காலத்தில் பைஸாந்தியரின் கீழ் இருந்த நாடு. மிக அண்மைக் காலத்திலேயே முஸ்லிம்கள் ரோம் அந்தோலியாவை கைப்பற்றினர். அரேபியரும் துருக்கியரும் பாரசீகரும் இன்றும் புவியியல் ரீதியில் அந்தோலியாவை ரோம் என்றே அழைக்கின்றனர். ரூமி என்பது அரபு வழக்கில் 'உரோமன்' என்பதைக் குறிக்கின்றது. இன்னொரு கருத்தில் ரூமி என்றால் அந்தோனியாவைச் சேர்ந்தவர் என்பதாகும்.

மவ்லவி (அரபு, பாரஸீகம்) மெவ்லானா (துருக்கி) என்பதன் பொருள் 'எமது குரு' என்பதாகும். 17ம் 18ம் நூற்றாண்டுகளில் மதச்சார்பற்ற சூழல் காலங்களில் துருக்கியில் நடைமுறையில் இருந்த இசை வளர்ச்சி ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

இதனால் துருக்கியின் இசை வரலாற்றில் சூ:.பி தர்வேஷ்களின் பங்கு முக்கியமானதாக கருதப்படுகின்றது.

ரூமி ஒரு பாரசீக சுன்னி முஸ்லிம். ரூமியின் செல்வாக்குத் தேசங்களையும் இனங்களையும் கடந்து ஈரானிலும், தஜ்கிஸ்தானிலும் துருக்கியிலும், கிரேக்கத்திலும் பஷ்தூண்களிடத்திலும் இந்திய உப கண்டத்திலும் இலங்கையிலும் பல மேற்கு நாடுகளிலும் பரவியுள்ளது. தென் ஆசிய முஸ்லிம்களிடத்தில் காணப்படும் ரூமியின் செல்வாக்கையும் இங்கு குறிப்பிடலாம்.

ரூமியின் தந்தை மத போதகர் பரம்பரையைச் சேர்ந்தவர். அவரும் ஒரு இஸ்லாமிய அறிஞராகவும் உலமாவாகவும் விளங்கினார். தஜ்கிஸ்தானைச் சுற்றி அன்று வளர்ந்த சூ:.பி மற்றும் இஸ்லாமிய மரபுகளினதும் பண்பாட்டினதும் வாரிசுகளாக ரூமியும் அவரது முன்னோரும் இருந்துள்ளனர். ரூமியின் அநேகமான கவிதைகள், ஈரானிய, ஆப்கானிஸ்தானிய செந்நெறி இசை மரபின் அடிப்படையில் அமைந்துள்ளன.

மெவ்லவி இசை மரபிற்கு துருக்கியில் பெரிய செல்வாக்கு இருந்தது. ஆன்மீக மற்றும் சமயச் சார்பற்ற வழிகளில் இசைக்கு மக்களும் மன்னர்களும் ஆதரவளித்தனர். செல்வந்தர் வீடுகளில் இசை நிகழ்ச்சிகள் நடந்தன. அவற்றில் பிரதான இசைக் கலைஞர்களாக தர்வேஷ் இசைவாணர்களும் பங்கேற்றனர். ஆன்மீக இசைக் குழுவினர்க்கும் சமயச் சார்பற்ற இசைக் குழுவினர்க்கும் இடையிலான ஒத்துழைப்புடன் இவ்விசை நிகழ்ச்சிகள் நடந்துள்ளன.

எனினும் படிப்படியாக தர்வேஷ்களின் சூ:.பி இசைக்கும் சமயச் சார்பற்ற இசைக்கும் இடையில் வேறுபாடுகள் தோன்றின. துருக்கிய இசை வரலாறு உள்ளிட்ட ஏனைய முஸ்லிம் நாடுகளின் இசை வரலாற்றை நோக்கினாலும் இசை இஸ்லாமிய உலகில் விளிம்பு நிலையிலோ பொது மக்கள் மற்றும் அரச ஆதரவுகள் அற்ற நிலையிலோ இருக்கவில்லை என்பதை உணர முடியும். (Sufism: music & society in Turkey Anders Hammarlud, Istanbul 2005)

அதனால் சூ:.பி இசை ஆராய்ச்சியின் ஒரு பகுதி இஸ்லாமிய இசை ஆய்வின் ஒரு பகுதியாகும். சூ:.பி இசை பற்றி இரு விடயங்கள் வலியுறுத்திக் கூறப்படுகின்றன. சூ:.பி இசை பள்ளி வாசல்களில் இடம் பெறுவதில்லை. உத்தியோக பூர்வ இஸ்லாமி யத்தின் சமய இசையாகவும் அது எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. சூபி இசை சூபிகளாலும் அவ்விசையை விரும்பி ரசிக்கும் முஸ்லிம் களாலுமே பாதுகாக்கப்பட்டுவருகிறது.

சூ:.பி இசை பள்ளி வாசல்களில் இடம்பெறு வதில்லை. உத்தியோக பூர்வ இஸ்லாமி யத்தின் சமய இசையாகவும் அது எடுத்துக் கொள்ளப் படுவதில்லை. சூபி இசை சூபிகளாலும் அவ்விசையை விரும்பி ரசிக்கும் முஸ்லிம் களாலுமே பாதுகாக்கப் பட்டுவருகிறது.

## திக்ர் - இசை

திக்ர் என்றால் நினைவூட்டுதல் என்று பொருள். சூ.்.பித்துவத்தில் இது ஒரு கூட்டு நிகழ்வாக நடத்தப்படுகிறது. ஓதல், தியானம், மூச்சுப் பயிற்சி என்பவற்றோடு நடனமும் இசையும் இதில் இடம் பெறும். இந்த திக்ர், தியான முறையில் இடம் பெறும். இசையையும் உள்ளிட்டதாகவே இது 'ஸமா' என்று கூறப்பட்டது. தியானமும் ஆன்மாவைத் தொடும் இசையும் ஒன்று கலப்பதே ஸமா வாகும்.

மத்திய கிழக்கிற்கும் துருக்கிக்கும் உரிய பாரம்பரியப் பொது இசைப் பண்புகளும் இசை மரபுகளுமே ஸமா இசையைப் பெரிதும் செழுமைப் படுத்தி உள்ளன.

முன்னர் குறிப்பிட்டது போல் சில சூ.்.பிப் பிரிவுகள் குறிப்பாக மெவ்லாவிப் பிரிவினரே ஸமாவை அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். துருக்கியிலும் மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றிலும் மெவ்லாவி சூ.்.பிப் பிரிவின் செல்வாக்கைக் காண முடியும். மத்திய கிழக்கிற்கும் துருக்கிக்கும் உரிய பாரம்பரியப் பொது இசைப் பண்புகளும் இசை மரபுகளுமே ஸமா இசையைப் பெரிதும் செழுமைப்படுத்தி உள்ளன. குறிப்பாக இவ்விசையின் அளவீடுகள், லயம், இராகங்களின் சூத்திரம் என்பன பொதுவாக மேற்காசிய மரபிற்குரியதாகும். இது சூ.்.பிய இசைக்கோ இஸ்லாமிய இசைக்கோ மட்டுமான மரபுகள் அல்ல. இப் பிராந்தியங்களில் வாழும் கிறிஸ்தவர்களும் யூதக் குடிகளும் பெரும்பான்மை முஸ்லிம்களோடு சேர்ந்து இதே இசை மரபுகளையே பின்பற்றுகின்றனர்.

## புல்லாங்குழல் இசை

சூபி இசைக்கான இசைக்கருவிகள், கலாசாரத்துக்கு கலாசாரம் வேறுபடுகின்றன. துருக்கி, ஈரான், வட ஆபிரிக்க நாடுகளில் 'நேய்' என்ற வாத்தியம் மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இது புல்லாங்குழல் வகையைச் சேர்ந்தது. ரோமானியர் இதை 'நேய்' என்று அழைத்தனர்.

தென் ஆசிய சூ.்.பி இசைக் கலாசாரத்தில் சூ.்.பி இசையில் ஹார்மோனியம் பிரதான இடத்தை வகிக்கின்றது.

நேய் வாத்தியத்துடன் சந்தூர், ரபாப், ஸால் (பக்லாமா) போன்ற கம்பி வாத்தியங்கள், இணைவாத்தியங்களாக பயன்படுத்தப்படும் ஊத் (கம்பி வாத்தியம்) மற்றும் த.்.ப் (மேளம்) கருவிகளும் பயன்படுத்தப்படும்.

தென் ஆசிய சூ.்.பி இசைக் கலாசாரத்தில் சூ.்.பி இசையில் ஹார்மோனியம் பிரதான இடத்தை வகிக்கின்றது. குறிப்பாக கவ்வாலி இசையில் ஹார்மோனியம் தவிர்க்க முடியாத ஒரு பாத்திரத்தை வகிக்கின்றது. இரு ஹார்மோனியங்கள் தப்லாவோடு இணைந்து வாசிக்கப்படும் போது கவ்வாலி இசையின் அழகு வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

மெவ்லானா ரூமியின் காலத்தில் சூ.்.பி இசையின் தவிர்க்க முடியாத பெருமைக்குரிய கருவி புல்லாங்குழல் (நேய்) ஆகும்.

ஈரான், துருக்கி ஆகிய நாடுகளோடு மத்தியாசியாவின் முக்கிய கருவி நேய். இஸ்லாம் தோற்றம் பெறுவதற்கு முன்னரே பல்வேறு சடங்குகளில் இக்கருவி பயன்படுத்தப்பட்டுள்ளது. தன்பூர், லைரா போன்ற கருவிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மத்திய கிழக்கு மற்றும் துருக்கிய இசைக் கருவிகளில் முக்கியத்துவம் பெறும் மற்றொரு கருவி கானூன் ஆகும். ஆயினும் ஸமாவின் தாய் வாத்தியம் புல்லாங்குழல்தான். ரூமி தனது சூபிப் பாடல்களில் புல்லாங்குழலிற்கு பெரிய இடத்தை வழங்கியுள்ளார். புல்லாங்குழல் சூபி இசையின் இசை அடையாளம்.

ஸமாவின் தாய் வாத்தியம் புல்லாங் குழல்தான். ரூமி தனது சூபிப் பாடல்களில் புல்லாங் குழலிற்கு பெரிய இடத்தை வழங்கியுள்ளார். புல்லாங்குழல் சூபி இசையின் இசை அடையாளம்.

'ஓடிச் செல்லும் அருவிகளை மனம் விரும்புவது போல் ஓ இறைவா இதயம் உன்னை விரும்புகிறது.' என்று பைபிளின் 'சங்கீதங்கள்' அத்தியாயத்தில் ஒரு பிரபலமான வாசகம் உண்டு. இதற்கு ஒப்பான பாடல்களை ரூமி தனது மஸ்ஸனவியில் தந்துள்ளார். அருவிக்குப் பதிலாக ரூமி பயன்படுத்துவது நேய் எனும் புல்லாங்குழல். நேய் வாத்தியக்காரர்களின் கைகளில் இருக்கும் புல்லாங்குழல் தனது மூலாதாரத்தின் உறவைப் பேசுகிறது. தர்வேஷ் ஸமா மரபில் புல்லாங்குழல் ஒரு முக்கிய வாத்தியக் கருவியாகும். மெவ்லவி சூபிப் பிரிவில் இசை பெற்றுள்ள இடத்திற்கு புல்லாங்குழல் சிறந்த எடுத்துக்காட்டாகும் (Anders Hammarlund 2005).

இந்த இசைக்குழு அனைத்திலுமே மிகவும் அதிர்ஷ்ட சாலி யார்
புல்லாங்குழல்தான்
இசையை கற்றுக் கொள்ள அதன் அதரங்கள் உன் உதடுகளை
ஸ்பரிக்கிறது.

மற்றோர் சந்தர்ப்பத்தில் ரூமி பின்வருமாறு பாடுகின்றார்.

இந்தப் புல்லாங்குழல்
எப்படி முறையிடுகிறது என்று
கவனமாய்க் கேள்
அது பிரிவாற்றாமை பற்றிய கதையைச் சொல்கிறது
… … … … … … … … … …. … … …. …. …. …. ….
புல்லாங்குழலில் உண்டாகும் நாதம்
செந்தழாலாய் இருக்கிறது
அது வெறும் ஓசை மட்டுமன்று
இந்த நெருப்புப் பற்றாதார் இல்லாமல் போவது நலம்

தப்ரீஸியிலிருந்து கென்யா வந்தடைந்த ஷம்ஸ் என்ற அறிஞர் ரூமியின் உள்ளத்தில் பெரும் ஆன்மீகச் சுவாலையை ஏற்றுவித்தார். ஷம்ஸ் மூலமாகத் தனக்குள் நிகழ்ந்து வந்த மறை தன்மையான மாற்றங்களை ரூமி தனது கவிதைகளில் படைத்தார். ரூமி ஒரு

'யாராவது மூச்சுக் காற்றினைப் பயன்படுத் தினால் தான் இசை பிறக்கும்'. இசை பற்றிய, காதல் பற்றிய ரூமியின் தத்துவங்கள் இங்கிருந்துதான் ஆரம்பிக் கின்றன.

மார்க்க அறிஞர். எனினும் இசையின் ஊடாக தனது உணர்வுத் தூண்டல்களையும் அக அனுபவங்களையும் வெளியிடுவதில் அவர் பெரிய முன்னோடியாக விளங்கினார்.

ரூமியிடம் இசை ஒரு தெய்வீக அல்லது ஆன்மீக உணர்வலை யைத் தோற்றுவித்திருந்தது. மஸ்னவியின் பல பாடல்கள் இதனை உணர்த்துகின்றன. 'யாராவது மூச்சுக்காற்றினைப் பயன்படுத்தினால் தான் இசை பிறக்கும்'. இசை பற்றிய, காதல் பற்றிய ரூமியின் தத்துவங்கள் இங்கிருந்துதான் ஆரம்பிக்கின்றன.

நேயனை விட்டுப் பிரிந்த யாருக்கும்
புல்லாங்குழல் உற்ற நண்பனாகும்
அதன் இனிய கீதம்
எங்கள் திரைகளைக் கிழித் தெறிகிறது
காதலின் செங்குருதி படிந்த கரடு
முரடான பாதையை
அது எடுத்தியம்புகிறது
மஜ்னூனின் காதல் வெறியை
அது பகிரங்கமாக்குகிறது.

காதலின் மூச்சுக்காற்றின்றி இசை ஓசை எழாது என்றும் 'நபாஸ் அர்ரஹ்மான்' கருணையாளனான இறைவனின் மூச்சு இன்றி மனிதனால் ஒன்றும் செய்ய இயலாது என்றும் ரூமி கூறுகின்றார். சரியாகச் சொல்லப் போனால் புல்லாங்குழல் மனிதனுக்கான குறியீடு. அவன் அவனது மூலதாரத்திலிருந்து (புல்லாங்குழல் போல்) பிரித்தெடுக்கப்பட்டுள்ளான். 'புல்லாங்குழல் அதன் மூலாதாரப் புதர்களில் இருந்து வெட்டிப் பிரிக்கப்பட்டிருப்பதைப் போல்' என்று மஸ்னவியில் ரூமி இதனை விளக்குகிறார். நேய் (புல்லாங்குழலின்) ஓசையைச் சில சூபிகள் மனிதக் குரலுக்கு ஒப்பிடுகின்றனர்.

## கவ்வாலி இசை

இந்திய உப கண்டத்தின் சூ.ஃபிஸமானது சூ.ஃபிஸ இசைச் செல்வாக்குள்ள மற்றொரு சிறப்பு மையமாகும். செழிப்பு மிக்க இந்திய சூ.ஃபித்துவ பங்களிப்புகளில் இசை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. சிஷ்தி (சூ.ஃபி) கவ்வாலி இசை மரபு இங்கு ஆன்மீக இசையாகவும் சமய சார்பற்ற இசையாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. சிஷ்தி சூ.ஃபிப் பிரிவில் சூ.ஃபி இசை அல்லது கவ்வாலி இசை பல நூற்றாண்டுகளாக ஒரு இசை மரபாக இயங்கி வருகின்றது. சிஷ்தி பிரிவின் அஜ்மீர் 'ஷரீப் இதன் மையத் தலமாகும்.

கவ்வாலி தென் ஆசியாவின் சூ.ஃபி இசை என்று கூறுவது மிகவும் பொருத்தமானது. பஞ்சாப்பிலும் பாக்கிஸ்தானின் சிந்துப்

பிராந்தியத்திலும் இதன் செல்வாக்கை காண முடியும். இந்தியாவில் ஹைதராபாத், டெல்லியிலும் பங்களாதேஷிலும் இதன் செல்வாக் கைக் காணலாம். வேறு வகையில் கூறுவதானால் இது தர்ஹா சங்கீதம். ஹஸரத் அமீர் குஷ்ரூ திஹ்லாவி சிஷ்தி 13ம் ஆண்டில் உருவாக்கிய புதிய இசை மரபின் தொடர்ச்சிதான் அஜ்மீர் ஷரீப் கவ்வாலி மரபு இசை. இன்றுவரை சூபி இசையாகவும் முஸ்லீம் களின் சமயச் சார்பற்ற பொது இசையாகவும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும் பிரசித்தி பெற்று கவ்வாலி விளங்குகிறது.

கவ்வாலி 11 ஆம் நூற்றாண்டின் ஸமா இசையுடன் ஒத்ததாக வளர்ந்த இசை மரபு. ஷெய்க் நிஸாமுதீன் அவுலியாவிற்கு முன்னர் இருந்தே வளர்ந்த இசை வகை என இது கருதப்படுகின்றது. நிஸாமுதீன் அவுலியா ஒரு இறை நேசர். தனது இறை வழிபாட்டுக் கூடங்களில் இவ்விசை வகையைப் அவர் பயன்படுத்தினார். அப்போது இது டெல்லியில் பதற்றத்தை ஏற்படுத்தியது. சமய சட்ட மரபை இறுக்கமாக பின்பற்றுவோர் இதனை எதிர்த்தனர். இனிய இசைக்கலவையை உருவாக்கி அதனை தர்ஹா வழிபாடுகளில் ஷெய்க் நிஸாமுதீன் பயன்படுத்தினார். மக்களுக்கு உயர் உண்மையின் ஆன்மீக உணர்வுகளின் தத்துவங்களைக் கூறும் பாடல்களாக அவை அமைந்திருந்தன.

அரபு இசை நுட்பங்களை இந்திய செவ்வியல் இசை மரபிற்கு அறிமுகம் செய்து இந்திய இசை மரபில் பெரிய பண்பாட்டு மாற்றத்திற்கு அவர் வழிவகுத்தார்

எனினும் கவ்வாலி இசையின் தனிப் பெரும் தலைவராகப் போற்றப்படுவர் அமீர் குஷ்ரூ ஆவார். திஹ்லாவி அமீர் குஷ்ரூ ஒரு இசை மேதை, தத்துவஞானி, அறிஞர், பெரிய கவிஞர். இந்திய உபகண்டத்தின் பண்பாட்டின் தவிர்க்க முடியாத சிறப்பு சின்னமாக அவர் போற்றப்படுகிறார். அமீர் குஷ்ரூ ஒரு சூ∴பி ஞானி. டெல்லி நிஸாமுதீன் அவுலியாவின் சீடர். பாரஸீக மொழியில் அவர் கவிதைகள் இயற்றினார். இந்திய சூ∴பி இசையின் தந்தையாகவும் அமீர் குஷ்ரூ போற்றப்படுகிறார். பாரஸீக, அரபு இசை நுட்பங்களை இந்திய செவ்வியல் இசை மரபிற்கு அறிமுகம் செய்து இந்திய இசை மரபில் பெரிய பண்பாட்டு மாற்றத்திற்கு அவர் வழிவகுத்தார்.

பன்மைக் கலாசார, பன்மை அடையாள முனைப்பிற்கு இந்தியாவிற் கான முக்கிய அடையாள மாகவும் குஷ்ரூ கருதப் படுகிறார்.

கவ்வாலி அவர் கைகளால் மெருகூட்டப்பட்ட புதிய இசை வகை. பாரஸீக, அரபு, துருக்கி இசைப்பண்புகளின் நுட்பமான கலவையுடன் கவ்வாலி அழகுபடுத்தப்பட்டது. ஏராளமான கவிதை களையும் கஸல் இசைப்படல்களையும் பாரஸீக மொழியிலும் ஹிந்தாவி மொழியிலும் குஷ்ரூ பாடினார். வட இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் அவரது பாடல்களும் இசையும் இன்றும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. பன்மைக் கலாசார, பன்மை அடையாள முனைப்பிற்கு இந்தியாவிற்கான முக்கிய அடையாளமாகவும் குஷ்ரூ கருதப்படுகிறார். பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் இன்னும் அவரது

பாடல்களும் இசை வடிவங்களும் சமய இசையாகவும் பொது இசையாகவும் புகழ்பெற்று விளங்குகின்றன.

பாரஸீக அரபு இசைப் பண்புகளின் பிரதான 'மக்காம் இசை' நுட்பத்தை இந்திய இராக முறையில் குஷ்ரூ ஒன்றிணைத்தார். மக்காம் என்றால் அதன் நேர் பொருள் இடம். இது அரபு இசையில் இனிய மெல்லிசை இராகங்களுக்காக பயன்படுத்தப்படும் முறை யென்றும் ஒவ்வொரு மக்காமும் ஒரு குறித்த உணர்ச்சியை எழச் செய்யக் கூடியது என்றும் கூறப்படுகின்றது. காதல், பெருமை, ஆற்றல், மனவலிமை, துயரம் போன்ற உணர்ச்சிகளை இது தொடர்புபடுத்துகிறது.

'இசை சரியான முறையில் பயன்படுத்தப் படுமானால் மனித உணர்வு களை மிக உயர் நிலைக்கு கொண்டு செல்லும் ஆற்றல் அதற்கு உண்டு'.

கவ்வாலி இசை மேதையான மறைந்த நுஸ்ரத் பத்தே அலி கான் கவாலி இசை பற்றி பின்வருமாறு கூறியிருந்தார். 'இசை சரியான முறையில் பயன்படுத்தப்படுமானால் மனித உணர்வுகளை மிக உயர் நிலைக்கு கொண்டு செல்லும் ஆற்றல் அதற்கு உண்டு'. சூ∴பி இசையின் உன்னதம் பற்றி சூ∴பி இசை ஆய்வாளர் வருன் சோனி பின்வருமாறு கூறுகின்றார்.

மக்களின் பொழுதுபோக்கினை நோக்காகக் கொண்டு வெகு மக்கள் இசை (Populer music) ஆக்கப்படுகிறது. ஆனால், சூ∴பி இசை மனித ஆன்மீக உணர்வுகளை மேம்படுத்துவதை நோக்காக கொண்டது.

காலம் சென்ற சப்றி சகோதரர்கள் பாடிய மிகப் பிரபலமான ஒரு கவ்வாலி இசைக்கான பாடல் வரிகளை இங்கு நோக்கலாம். 'தார்டூஜோலி' என்று அப்பாடல் ஆரம்பமாகிறது. பாடகர் ஒரு யாசிப்பவர் நிலையில் திருத்தூதர் முஹம்மத் நபி முன்னிலையில் உணவு தரும்படி யாசகம் கேட்கிறார். உடலுக்கான உணவை அல்ல ஆன்மீக நிறைவுக்கான உதவியையே அவர் கேட்கிறார். 'எனது பையை நிரப்புங்கள்' என்பது அப்பாட்டின் தலைப்பு

மதீனாவின் அரசரே
எனது விண்ணப்பத்தைக்
கேளுங்கள்
உங்கள் கருணையைக் காட்டுங்கள்
இறைவன் அருள் புரிவார்
ஒரு பரதேசியாக இங்கு நான் வந்துள்ளேன்
உங்கள் வாசல் அருகில் நிற்கிறேன்
நான் யாசகத்திற்காக வந்துள்ளேன்
ஓ! முஹமத் எனது பையை நிரப்புங்கள்
வெறுங்கையுடன் செல்வதற்கு நான்
இங்கு வரவில்லை.
உங்கள் வாசலுக்கு வந்து

வெறுமனே திரும்பிச் செல்வதாக
யாராலும் கூற முடியுமா

எனது பையை நிரப்புங்கள்
நீங்கள் தான் நண்பர்களுக்கு உதவுபவர்
யார் வந்து கேட்டாலும் உதவும்
மனம் உங்களுடையது
மதினாவின் பிரபுவே
எனது பையை நிரப்புங்கள்
நான் துயரிலும் வேதனையிலும்
சிக்கி உள்ளேன்
என் கைகளைப் விரித்து எதனையாவது
பெற்றுச் செல்ல உங்கள்
வாசலுக்கு நான் வந்துள்ளேன்
ஓ முஸ்தபா நான் உங்களின் யாசகன்
மதினாவின் பிரபுவே
என் பையை நிரப்புங்கள்

சூபி இசையைப் போலவே சூபிக் கவிதைகளுக்கும் பக்தி நிலையும் ஆன்மீகக் காதலும் சிறப்புப் பண்புகளாக விளங்குகின்றன. மேற்காசிய, மத்திய ஆசிய இசைப் பண்புகளும் இந்திய இசை மரபும் சந்திக்கும் இடமாக கவ்வாலி இசையைச் சுட்டிக்காட்டலாம். ஸமா இசையும் கவ்வாலி இசையும் சூபிப் பள்ளிகளின் பிரதான இசைப் பாரம்பரியமாக விளங்கும் அதேவேளை சமயச் சார்பற்ற பொது இசையாகவும் பரிணாமம் அடைந்திருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

சூபி இசையைப் போலவே சூபிக்கவிதைகளுக்கும் பக்தி நிலையும் ஆன்மீகக் காதலும் சிறப்புப் பண்புகளாக விளங்குகின்றன.

## உசாத்துணைகள்

இமாம் கஸ்ஸாலி, (1990) கிதாபுஸ் ஸமாஉ: இசை கேட்பதன் ஒழுங்குகள், (மொ.பெ) சென்னை: மு. முஹம்மது கவுஸ்.

களி, ஆர்.பி.எம்., 2003 (1961) மௌலானா ரூமியின் கிதாபுல் மஸ்னவி, தர்ஹாடவுன் இலங்கை.

ஜலாலுத்தீன் ரூமி, (2015) தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் (மொ.பெ) என். சத்திய மூர்த்தி, நாகர் கோயில், இந்தியா.

Mikko Vithamaki (2015) Poetry in sufi practice, Dissertation, Helsinki : University of Helsinki.

Sufism music and society. InTurkey and middle East (2005), (ed) Ander's Hammarlund, Tord olsion and others England.